# மார்னிங் ஸ்டார் மற்றும் பாதுகாவலன் - எண்ணிமப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

மக்களை மிக அதிகளவில் சென்றடையும் எழுத்தாவணங்கள் பத்திரிகைகள். மக்களின் சிந்தனையில் இவை முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன அல்லது செலுத்த முற்படுகின்றன. கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் போக்கில் பத்திரிகைகளின் செல்வாக்குக் குறைத்து மதிப்பிட முடியாதது. வரலாறு எழுதுதலில் முதல்நிலைத் தகவல் வளங்களான பத்திரிகைகளின் உசாத்துணை அடிப்படையானதும் முக்கியமானதும் ஆகும்.

யாழ்ப்பாணத்திலேயே இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான உதயதாரகை வெளியாகத் தொடங்கியது. எட்டுப் பக்கங்களில் தமிழ், ஆங்கில ஆகிய இருமொழிகளில் ஆக்கங்களைக் கொண்ட இருமாத இதழாகத் தொடங்கப்பட்ட உதயதாரகையின் முதல் இதழ் 1841 யனவரி 7 ஆம் திகதி வெளியாகியது.
1841 முதல் 2017 வரையான 176 ஆண்டுகாலத்தில் நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் தொடங்கப்பட்டு வெளியாகியுள்ளன. சமயப் பத்திரிகைகள், சமூகப் பத்திரிகைகள், செய்திப் பத்திரிகைகள், அரசியற் பத்திரிகைகள், இயக்கப் பத்திரிகைகள், இலக்கியப் பத்திரிகைகள், கட்சிப் பத்திரிகைகள் என பல்வேறு வகை உள்ளடக்கத்துடன் வார இதழ்கள், இருவார இதழ்கள், நாளிதழ்கள் மாத இதழ்கள் எனப் பல்வேறு கால இடைவெளிகளில் அவை வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் சிறப்புற்றிருந்த அமெரிக்கமிஷனரிமாரால் 1841 இல் உதயதாரகை என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலத்தில் The morning star

என்றும் தமிழில் உதயதாரகை என்றும் அழைக்கப்பட்ட இப்பத்திரிகை இரு மொழிகளிலும் வெளிவந்தது. அமெரிக்க மிஷனரியின் இப்பத்திரிகை வெளியீடு மற்றைச் சமயத்தவரையும் பத்திரிகை வெளியிட வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. 1876 இல் The catholic Guardian என்ற 'சத்திய வேத பாதுகாவலன்' என்ற பத்திரிகை கத்தோலிக்கத் திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கும் இப்பத்திரிகை வாரம் இருமுறை வெளிவருகின்றது.

இவ்விரு பத்திரிகைகளையும் எண்ணிமப்படுத்தி பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்

## செயற்றிட்ட நோக்கம்

இவ்விரு பத்திரிகைகளும் வெளிவந்த காலம் முதல் பல்வேறு வ்ரலாற்றுச்சான்றுகளுக்கு ஆதரமாகத் திகழ்கின்றன. எனவே இப்பத்திரிகைகளது அனைத்து வெளியீடுகளையும் எண்ணிமப்படுத்தி பாதுக்காக்க வேண்டும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் இப்பத்திரிகைகள் தொடர்பான அனைத்து பிரதிகளும் எண்ணிமப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

## மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**